

വിവിധ വിദ്യാ

विविध विद्या

# விவித வித்யா

காலாண்டிதழ்

*VIVIDHA VIDYA*

சுபாநு, ஆடி - மார்கழி
2003

July - December



ஸ்தாபக ஆசிரியர்:

சுரபாரதி சேவா துரந்தரர்
வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,
சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்,
**பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா**

| | | | |
|---|---|---|---|
| மலர் 2 | எழுந்திரு! விழித்திரு! கோரியகருமம் நிறைவேறும்வரை உழைத்திரு! | இதழ் 1,2 |  |

## இன்று புதிதாய்ப் பிறந்தோம்.

பழைமையில் காலூன்றிநின்று புதுமைகளை வரவேற்போம்.
வேற்றுமைகளிலிருந்து ஒற்றுமையை நாடுவோம்.
முரண்பாடுகளை முன்வைத்து ஒருமைப்பாடு காண்போம்.

5

நிர்வாக ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்)

25/=

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே

– திருமந்திரம் 84

## உள்ளதோடு........

இந்த இதழ் துயரம் தோய்ந்த நினைவுகள் பலவற்றுடன் விரிகிறது. எமது கௌரவ ஆசிரியர் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மாவையும் ஆர்வலரும் ஆதரவாளருமான பிரம்மஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்களையும் நாம் ஒருசேர இழந்துள்ளோம்.

அதுமட்டுமல்லாமல் கலை இலக்கிய உலகத்தின் இரண்டு முக்கிய பிரமுகர்களையும் நாம் இழந்து தவிக்கிறோம். ஏ.ரி. பொன்னுத்துரை, என். வீரமணி ஐயர் ஆகியோரே அவர்கள்.

இத்தகைய நெருக்கடிகளால் ஜுலை - செப்ரம்பர் இதழ் வெளிவர வில்லை. ஒக்ரோபர் - டிசம்பர் இதழுடன் இணைந்து அதிக பக்கங்களாக இவ்விதழ் மலர்கிறது.

நீத்தார் பெருமைகளை நினைவுகூர்வதனால் வழமையான பல பகுதிகள் இவ்விதழில் இடம்பெற வில்லை. வாசகர்கள் எமது பிரசிகைளைப் புரிந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

நாம் அடிக்கடி குறிப்பிடுவது போல பல அன்பர்கள் "விவித வித்யாவி"னை நாடி ஆதரவுக்கரம் நீட்டிவருகிறார்கள். ஆலோசனைகள், அபிப்பிராயங்கள், ஆக்கங்கள் நிதியுதவிகள் என்பன கிட்டுகின்றமை மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகின்றன.

அடுத்த இதழில் சந்தாதாரர் ஆதரவாளர் விபரம் இடம்பெறும்.

## ........நாங்கள்.


முகவரி
ப.சிவானந்தசர்மா
"விவிதவித்யா"
கந்தசாமிகோயில் அருகில்,
இணுவில், சுன்னாகம், இலங்கை.
☎ 021-222-6004
e-mail :
vidya @ hotmail.com
vidya @ yahoo.com

அஞ்சலி செய்கிறோம்.

'விவித வித்யா'வின் கௌரவ ஆசிரியர்,

சுரபாரதி சேவா துரந்தரர்

வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,

சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்,



## அமரர்

# பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா அவர்கள்

வடகோவைச் சபாபதி நாவலர், தென்கோவை கந்தையாபிள்ளை முதலிய பேறறிஞர்களின் வரிசையில் கோப்பாய்க் கிராமம் தமிழுலகிற்கு ஈன்றளித்த அரிய மணிகளில் ஒருவரான பண்டிதர் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் பஞ்சாட்சர சர்மா அவர்கள் அமரராகிவிட்டார்.

கோப்பாய்க் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் நீண்டகால வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சர்மா அவர்கள் நம் தமிழ்மொழிக்கும் சம்ஸ்கிருத மொழிக்கும் சைவ சமயத்துக்கும் தமிழ், சம்ஸ்கிருத இலக்கிய உலகிற்கும் இவை சார்ந்த வகையில் சமூகத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இத்தகைய அவரது பணிகளைப் பாராட்டிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல நிறுவனங்கள் அவருக்கு வழங்கிய விருதுகள் அநேகம்.

அவர் சிவபதமடைந்துவிட்ட இந்த நேரத்தில் அவரது பணிகளையும் பண்புநலனையும் சிறிது நினைவுகூர்ந்து அவரது வாழ்க்கைத் தடத்தையும் சிறிது அசைபோடுவதன்மூலம் இன்றைய இளைய தலைமுறையினருக்கு அவரைப்பற்றி அறிமுகம் செய்வதோடு நமது அஞ்சலிகளையும் அவருக்குச் செலுத்தி மனநிறைவு கொள்ளலாம் என எண்ணுகிறோம்.

வடகோவையில் பிரபல சித்தவைத்தியரும் மாந்திரீக நிபுணரும் புராணபடன வித்தகருமான பிரம்மஸ்ரீ கோபாலையர் சபாபதிஐயர் அவர்களுக்கும் கந்தரோடை ஆரிய திராவிட விற்பன்னரும் புலவருமான சிவஸ்ரீ சிவப்பிரமணியக் குருக்களின் ஏகபுத்திரி மீனாட்சி அம்மாவிற்கும் மூத்த புதல்வராகத் தோன்றியவர் நமது பஞ்சாட்சர சர்மா அவர்கள். நள வருடம் ஐப்பசி மாதம் மிருகசீரிட நட்சத்திரத்திலே (13-11-1916) இவர் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியைச் சொந்த ஊரிலே ஜம்புகேஸ்வரக் குருக்கள் என்பாரின் கோவில் பாடசாலையிலும் அதையடுத்து கல்வியதிகாரி முகாந்திரம் சதாசிவ ஐயரால் நடத்தப்பட்ட சுன்னாகம் பிராசீன பாடசாலையிலும் கற்றார். இடையில் சிலகாலம் கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை ஆகிய தமதூர்ப் பாடசாலைகளிலும் கல்வி கற்றார். வித்துவசிரோமணி கணேசையரிடம் பாடம் கேட்ட

பெருமை இவருக்குண்டு. தமிழ்ப் பாலபண்டித பட்டத்தையும் பெற்றார். வியாகரணசிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி. சீதாராம சாஸ்திரிகளிடம் வடமொழியைக் கற்று சம்ஸ்கிருத பண்டிதராகவும் ஆனார். ஆங்கிலம், சிங்களம், தெலுங்கு, குஜராத்தி முதலிய மொழிகளிலும் ஓரளவு அறிவைப் பெற்று விளங்கிய இவர் மலையாளத்தில் மிகுந்த பாண்டித்தியம் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் இருவருடங்கள் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும் பின்பு ஓய்வுபெறும்வரை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

நீர்வேலி சோதிட புராண வித்தகராக விளங்கிய சிவஸ்ரீ க. தியாகராஜக் குருக்களின் கனிஷ்ட புதல்வி இராசாத்தி அம்மாவை 30-03-1945இல் திருமணம் செய்து இனிய இல்லறத்தை நடத்தினார். இவர்களது இல்லறப் பேறாக ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். மூத்த குழந்தை சிறுவயதிலேயே காலமாகிவிட்டது. பொறியியலாளர் நித்தியானந்த சர்மா (இப்போது சுவாமி அக்ஷராத்மானந்தா- இராமகிருஷ்ணமடம், ஆந்திரப்பிரதேஷ்), சௌதாமினி, சாம்பசிவக் குருக்கள் (எழுத்தாளர் சௌமினி) சிவானந்த சர்மா B.A.(Hons) (கோப்பாய் சிவம்), பிரபல சோதிடர் சோமசேகர சர்மா (பதுளை), ஆசிரியை அனுராதா புருஷோத்தம சர்மா ஆகியோர் இவர்களின் மக்கட்செல்வங்களாம்.

1943 இலிருந்தே இவர் ஒரு சிறந்த வாசகராகவும் எழுத்தாளராகவும் முகிழ்த்தார். கலாமோகினி, வீரசக்தி, ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, சோதிடமலர், அம்புஜம், அருவி, நாவலர் குரல், இலங்கை விகடன், காந்தீயம், இந்துசாதனம், ஈழநாடு, சுதேசநாட்டியம் முதலிய தமிழக, ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ச.ப.சர்மாவின் பல்துறை ஆக்கங்கள் வெளிவந்தன. மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான சர்மா அவர்கள் அப்பத்திரிகையின் ஆசிரியபீடத்தையும் அலங்கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வானொலியில் சைவநற்சிந்தனைகளையும் இலக்கியப் பேச்சுக்களையும் வழங்கியிருக்கிறார். பல்வேறு காலங்களில் வெளிவந்த பல பாராட்டுவிழாமலர்களின் தொகுப்பாசிரியராகவும் பல சிறந்த நூல்களின் பதிப்பாசிரியராகவும் விளங்கியதோடு பல நூல்களுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துமிருக்கிறார்.

இவர் ஓர் ஆசிரியர் என்பதற்கிணங்கப் பல பாடநூல்களையும் உரைவிளக்க நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்.

சம்ஸ்கிருதக் கல்வியை வளர்ப்பதற்காகப் பெரும்பாடுபட்டுப் பல இடங்களிலும் சம்ஸ்கிருத வகுப்புக்கள், பரீட்சைகள் முதலியவற்றை நடத்தியிருக்கிறார்.

சமயம், இலக்கியம், சமூகம் எனப் பல்துறைசார்ந்த சங்கங்கள் பலவற்றில் முக்கிய உறுப்பினராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவருடைய பங்களிப்பைப் பெற்ற 42 நிறுவனங்களின் பெயர்களும் இவரது ஆக்க இலக்கியங்கள் என 56 படைப்புக்களும் பதிப்பித்த அல்லது தொகுத்த நூல்கள் என 06 நூல்களும் உரைவிளக்கம் செய்தவை என 05 நூல்களும் அணிந்துரை வழங்கியவைஎன 04 நூல்களும் மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்கியவை

என 12 நூல்களும் பரீட்சைப் பங்களிப்புக்கள் என எட்டுவிதமான பரீட்சைகளும் புள்ளிவிபரமாக மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம் என்ற நூலில் தரப்பட்டுள்ளமை சமூகமட்டத்தில் இவர்வழங்கிய காத்திரமான பங்களிப்புப் பற்றி அறிய உதவுகின்றன.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

என்ற வள்ளுவன் வாக்கை அளவுகோலாகக் கொண்டு பார்க்கின்றபோதும் அவரது ஐந்து பிள்ளைகளும் தத்தமது துறைகளில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர் என்பது அவரது தனித்துவமும் சிறப்பும் தொடர்ந்து நிலைபெறுகின்றமைக்குச் சான்றாகும்.

பிறருக்கு உதவுதல், படிக்கவரும் மாணவர்களின் பசி, களையைப் போக்குவதிலும் முனைந்து நிற்றல், கடைசிக் காலம்வரை தாம் பல விடயங்களைத் தொடர்ந்து கற்றுக்கொண்டிருந்தமை, பல்துறைசார்ந்த விடயங்களைக் கடைசிக் காலம்வரை தேடித்தேடி வாசித்தமை, தாம் கண்டறிந்த புதிய விடயங்களைத் தம்மைச் சார்ந்தவர்களுக்குச் சுவைபட எடுத்துக் கூறுதல், மாணவர்களுக்களுக்கு எந்த விடயத்தையும் தெளிவுற விளக்குதல், யாருடனும் தேவையற்ற முரண்பாடுகளை வளர்த்துக்கொள்ளாமல் நட்புநிலையைப் பேணுதல் என்பவை என்றும் அவரிடம் காணப்பட்ட பண்புநலன்கள். இத்தனை பெருமைகளை உடையவராகவிருந்தும் அவர் பலரால் அறியப்படாமலும் இருந்திருக்கிறார். அதற்குக் காரணம் அவரது அளவுக்குமிஞ்சிய அடக்கமேயாகும் என்று அவரது இளமைக்கால நண்பரும் முதுபெரும் எழுத்தாளரும் மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலவேரும் ஆகிய சாகித்திய ரத்தினம் தி.ச. வரதராசன்(வரதர்) அவர்கள் கூறிய கருத்துரையுடன் இந்தக் குறிப்புரையை நிறைவுசெய்து அமரர் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா அவர்களுக்கு எமது இதயம் நிறைந்த அஞ்சலிகளை மீண்டும் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

அமரர் ச.ப. சர்மா அவர்களின் மறைவுகுறித்து யாழ்ப்பாணத் தினசரிகளான 'தினக்குரல்', 'ஈழநாடு', 'உதயன்', 'வலம்புரி' ஆகிய அனைத்துத் தினசரிகளும் அஞ்சலிக் கட்டுரைகளை வெளியிட்டன. 'வெளிச்சம்', 'மல்லிகை' ஆகிய சஞ்சிகைகளும் கொழும்புத் தினசரிகளின் வாரமலர்களும் அவரைப்பற்றிய விரிவான கட்டுரைகளை வெளியிட ஏற்பாடுகள் செய்துவருவதாக அறிகிறோம்.

நியந்த்ரீ, கோப்பாய் ஞானபண்டித் சைவ விருத்திச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் அமரர் சர்மா அவர்களுக்கு அஞ்சலிக் கூட்டங்களை நடத்தின. ஞானபண்டித சைவ விருத்திச் சங்க அரங்கத்திலே அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது. எழுத்தாளர் ஒன்றியத்திலும் விரைவில் அவரது உருவப்படம் வைக்கப்படவுள்ளது.

.........விவித வித்யா பார்த்தேன். இந்தியாவிலிருந்து முன்பு வெளிவந்த கீர்வாணி ஞாபகம் வந்தது. நன்முயற்சி. வெற்றிபெற என் வாழ்த்துக்கள்.

- சமஸ்கிருத பண்டிதர் கி. சதாசிவ சர்மா,
கோலாலம்பூர், மலேசியா, 12-03-03.

.........."சமஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள்" என்ற தலைப்பிலே கட்டுரைகள் தொடராக வெளிவருமா?

கிரியைகளைச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் செய்த சிவாசாரியார்கள் பலர் யாழ்ப்பாணத்திலும் வெளியிடங்களிலும் வாழ்ந்துள்ளனர். இவர்கள் சம்பந்தமான ஆதாரபூர்வமான தகவல்களைக் கொண்ட கட்டுரைகள் வெளிவருவது பயன்மிக்கது.

தாய்மொழியில் தவறு செய்யலாமா? - காலத்துக்குத் தேவையான கட்டுரைத்தொடர். தமிழில் யாரும் எப்படியும் எழுதலாம், பேசலாம் என்ற மனப்பான்மை அல்லது அறியாமை நீங்கவேண்டும்.

- சி. சிவசரவணபவன். (சிற்பி)
29-08-03

............அந்தணர்களிடையேயான நட்புறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பும் சர்வானந்தமய பீடத்தைப் பற்றியும் "விவித வித்யா" பற்றியும் தெரிந்துகொண்டேன். மிக்க மகிழ்ச்சி. நல்ல முயற்சி. எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

- திருமதி ஜயந்தி திசநாயக்கா
கிழக்குப் பல்கலைக் கழகம், 03-11-03.

..........உங்கள் ஆக்கபூர்வமான முயற்சிக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். ........எமது சமூகத்திற்கும் ஆலயங்களின் வளர்ச்சிக்கும் அரும்பெரும் தொண்டாற்றிய எமது சமூகப் பெரியோர்களின் வாழ்க்கை. சேவைகள் தொடர்பான செய்திக் குறிப்புக்களை வெளியீடு செய்தல் சிறப்பு.

கா. ஸ்ரீநிவாசன்
மயிலணி, சுன்னாகம். 18-08-03.

உ

# சிவாகம மரபில் அஷ்டாதச கிரியாவலி

## (பதினெண் பூஜை விளக்கம்)

இந்துப் பண்பாட்டு மரபிலே வேதங்களும் சிவாகமங்களும் முக்கியமான இடத்தினைப் பெற்று வருகின்றன. தொன்மையான காலம் முதல் இவை முதன் நூல்களாகவும் சிறப்பு நூல்களாகவும் முக்கியமான நூல்களாகவும் அமையப் பெறுவதோடு மற்றைய சமய சார்பான நூல்களுக்கு முன்னோடிகளாகவும் விளங்குகின்றன. சிறப்பு நூல்கள் எனச் சிறப்பிக்கப்பட்டு வரும் சிவாகமங்கள் இருபத்தெட்டும் சமயம், தத்துவம், கிரியை என பல்வேறு துறைகளுக்கும் மூல ஊற்றுக்களாகவுள்ளன.

*மஹேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா*

**கிழக்குப் பல்கலைக்கழக சம்ஸ்கிருத விரிவுரையாளர்.**

கிரியை மரபுகளின் சிறப்பையும் அவற்றின் ஒழுங்கு முறைகளையும் விளக்கங்களையும் சிவாகமத்தின் கிரியா பாதத்திலேயே காணமுடிகின்றது. குறிப்பாக இறைவனை வழிபடும் முறையை விளக்கும் பகுதியே கிரியாபாதம் எனப்படும். இக்கிரியா பாதத்திலே கிரியைகளுக்குத்தான் மிகவும் முக்கியமான இடம் அளிக்கப்படுகின்றது. இங்கு திருக்கோவில்களிலே அனுஷ்டிக்கப்பட வேண்டிய கிரியைகள் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை "கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிரயச்சித்தாந்தம்" என வகைப் படுத்தப்பட்டுள்ளன.

கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்பது திருக்கோவில் அமைப்பதற்கான பூமியை உழுதல் முதற்கொண்டு இறைவனைச் சிறப்புற விளங்கச் செய்தல் வரையுள்ள கிரியைகளை எடுத்துக் கூறும் பகுதியாகும். அத்துடன் கர்ஷணம் என்னும் சொல்லிற்கு "ஆகர்ஷித்தல்" என்ற பொருளும் உண்டு. எனவே இறைவனை ஆகர்ஷணம் செய்வது முதற்கொண்டு பிரதிஷ்டை செய்வது வரையிலான கிரியைகளுக்கும் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்ற பொருள் விளக்கம் பொருந்தும்.

"ப்ரகர்ஷண திஷ்டதி அநயா (ப்ரக்கிரியா) சிவ: இதி பிரதிஷ்டா" என்று பிரதிஷ்டா என்னும் சொல்லிற்கு விளக்கம் அளிப்பர். அதாவது

எங்கும் நீக்கமற நிறைந்தும் கடந்தும் உள்ளும் இருப்பவராகிய சிவ பெருமான் (கடவுள்) ஆலயங்களிலும் சிலைகளிலும் நிறைந்து சிறப்புற விளங்குகிறாரோ அதற்கு பிரதிஷ்டை எனப் பெயர் பெறும். எனவே இறைவனை ஆகர்ஷித்தல் என்னும் கிரியையே முதலில் நடைபெறுவதால் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்னும் சொல்லிற்கு இறைவனை ஆகர்ஷிப்பது முதற்கொண்டு பிரதிஷ்டை செய்வது வரை என்று பொருள்படும்.

"கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம்" என்ற கிரியைகள் ஆகமங்களில் பல விதமாகக் கூறப்பட்டுள்ளன. கிரியைகளுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் உள்ளதோ அந்த அளவிற்கு கிரியைகளின் கிரமத்திற்கு, ஒழுங்கிற்கு, வரிசைக்கு, முறைமைகளுக்கு முக்கியத்துவம் உண்டு. ஏனெனில் பக்தியை மட்டுமே முதலாகக் கொண்டு இறைவனை வழிபடுபவர்களும் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மலர்அணிவித்தல் போன்ற அனைத்துக் கிரியைகளையும் இறைவன்பால் உள்ள தூய அன்பின் காரணமாகச் செய்யலாம். ஆனால் அவர்கள் செய்யும் கிரியைகளுக்கு முன் பின் என்ற ஒழுங்கு கிடையாது. ஆனால் கர்ம மார்க்கத்தில் நின்று வழிபடுபவர்களுக்கோ கிரியைகளை விட கிரியைகளின் வரிசை முறைமை மிகவும் முக்கியமானது.

மூல ஆகமங்களில் பெரும்பாலும் கிரியைகள்தான் விளக்கப் பட்டுள்ளனவேதவிரக் கிரியைகளின் வரிசை முழுமையாக விளக்கப் படவில்லை. எனவே அதனை விளக்குவதற்காகவே "பதினெண் பத்ததி" ஆசிரியர்கள் அரும்பாடுபட்டுப் பத்ததிகளைத் தொகுத்தளித்தார்கள். இவர்கள் பதினெண் பத்ததித் தலைவர்கள் எனப்பட்டு அவர்களின் பெயரினாலேயே அப்பத்ததிகளும் சிறப்புப் பெற்றன. சோமசம்பு சிவாச்சாரியாரின் "கிரியா கண்ட கிரமாவளி" என்னும் பத்ததியும் அகோரசிவாச்சாரியாரின் "கிரியாக்கிரம ஜோதிகா" என்னும் பத்ததியும் கிரியைகளின் கிரமத்தை வலியுறுத்தி அப்பெயர்களைப் பெற்று வந்துள்ளன.

திருக்கோயில் அமைத்துப் பின்பு இறைவனைப் பிரதிஷ்டை செய்வதற்கான கிரியைகளைப் பல பத்ததி ஆசிரியர்கள் பலவிதமாகப் பிரித்தும் பல விதமாக வரிசைப்படுத்தியும் உள்ளனர். அவை ஒவ்வொன் றிற்கும் எந்தெந்த ஆகமங்கள் பிரமாணம் என்பதை கண்டறிவது மிகவும் கடினமானதாகும்.

வாமதேவ பத்ததி என்ற பத்ததி நூலின் ஆசிரியர் "ஆவர்த்தனம்" என்ற புதிய திருக்கோவிலுக்கான கும்பாபிஷேகக் கிரியைகளை "சதுஷ் ஷஷ்டி கிரியா மாலா" எனப் பெயரிட்டு அறுபத்து நான்கு (64) கிரியைகளாகப் பிரித்துச் சொல்லியுள்ளார். மற்றும் ஒரு நூலில் "பிரதிஷ்டா

அனுக்ரமணி" என்னும் பெயரில் முப்பது (30) கிரியைகளாகவும் அதே நூலில் "பிரதிஷ்டா அனுக்ரமணி" என்னும் பெயரிலேயே சுமார் நாற்பத்திரண்டு (42) கிரியைகளாகவும் பிரித்துள்ளார். அத்துடன் அதே நூலில் "பிரதிஷ்டா அனுக்ரமணி" என்னும் பெயரிலேயே சுமார் நூற்று முப்பது (130) கிரியைகளாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவை அனைத்தையும் சுருக்கி "அஷ்டாதச கிரியாவளி" என்னும் பெயரில் "பதினெட்டுக் கிரியைகளாகப்" பிரித்துள்ளனர். இந்த அஷ்டாதச கிரியாவளியும் இருவிதமாகக் கிடைக்கின்றன. ஆனால் இவ்விரண்டு அஷ்டாதச கிரியாவளிகளுக்கும் கிரமத்தில்தான் வேறுபாடு உள்ளதே தவிரக் கிரியைகள் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளன. அதிலும் ஒரு அடிப்படைக்கருத்தினை மையமாகக் கொண்டே இரண்டு கிரமங்களிலும் வேறுபாடு காணப்படுகிறது.

எவ்வாறெனில், முதலில் புதிய விம்பங்களுக்குரிய சடங்குகளைச் செய்து விட்டுப் பின்பு யாகபூஜை ஹோமம் போன்றவற்றைச் செய்வது என்னும் அடிப்படையில் ஒரு அஷ்டாதச கிரியாவளி உள்ளது. முதலில் யாகபூஜை, ஹோமம் ஆகியவற்றைத் தொடங்கிப் பின்னர் புதிய விம்பங்களுக்குரிய கிரியைகளைச் செய்தல் என்னும் அடிப்படையில் மற்றொரு அஷ்டாதச கிரியாவளி அமைந்துள்ளது. இவ்வாறாக வரும் இரண்டு முறைகளையும் பின்வருமாறு எடுத்துக் கூறலாம்.

"சிவப்பிரதிஷ்டாவிதி" என்னும் நூலில் உள்ள அஷ்டாதச (18) கிரியைகள் பற்றிய பகுதிகள்:-

அத வக்ஷ்யே விசேஷேண லிங்கஸ்தாபனம் உத்தமம்
அஷ்டாதச கிரியாவள்யா ம்ருதஸங்க்ரஹண பூர்வகம்
ம்ருத்ஸங்க்ரஹணகம் வாஸ்து பூஜனஞ்ச அங்குரார்ப்பணம்
.....................................................................................................
.....................................................................................................
ஜலஸ்நானம் நாமக்ருதி: விவாஹோஷ்டாதசஸம்ருதா:
அஷ்டாதச விதானேன ம்ருத்ஸங்க்ரஹண பூர்விகா
சிவ பிரதிஷ்டா விஹிதா சிவாகம ஸமீரிதா

"சிவலிங்கப்ரதிஷ்டாவிதி" என்ற நூலில் பின்வருமாறு அஷ்டாதச கிரியாவளி கூறப்பட்டுள்ளது.

"அத வக்ஷ்யே விசேஷேண லிங்கஸ்தாபனம் உத்தமம்
அஷ்டாதச விதானேன பிரதிஷ்டா விதி: உச்யதே

ம்ருத்ஸங்க்ரஹண மாரப்ய த்விதீயம் அங்குரார்ப்பணம்.
ரத்னந்யாஸம் த்ருதீயம்து நயநோன்மீலனம் சது:
பஞ்சமம் ப்ரதிமாசுத்தி: ஷஷ்டம் க்ராமப்ரதக்ஷிணம்
ஜலாதி வாஸனம் ஸப்த ரக்ஷாப்ந்தனம் அஷ்டமம்.
நவமம் வாஸ்து பூஜாச தசமம் பஞ்சகவ்யகம்:
ருத்ர மண்டப ஸம்ஸ்காரம் த்வாதசம் ஸயனந்துவா
ஹோம கர்ம த்ரயோதஸ்யம் ஸ்தாபனஞ்ச சதுர்தச
திதி ஸங்க்யம் ஸபந்தஞ்ச ஷோடசம் மந்த்ரபூஜனம்
ஸ்ப்ததசம் ததாநாம விவாஹோஷ்டா தசம் பவேத்
அஷ்டாதச விதானேன ம்ருத்ஸங்க்ரஹண பூர்வகம்

இவ்வாறாக சிவாகம மரபில் அஷ்டாதச கிரியாவளி (பதினெண் பூஜை) விளக்கம் கூறப்பட்டுள்ளது.

### ஜெர்மனியில் சமஸ்கிருதம்

சமஸ்கிருதம் பாரதத்தின் ஆத்மபாஷை. இருப்பினும் அங்கு அப்பாஷைக்குரிய அந்தஸ்து கவனிக்கப்படாமலே இருக்கிறது.

ஆனால், ஜெர்மனியில் சமஸ்கிருதம் உயர்ந்த மொழியாகக் கௌரவிக்கப் படுகிறது. உதாரணம் ஜெர்மனியில் தூத்ஷெவல் என்ற ஒலிபரப்புச் சேவையில் மாதமிருமுறை சமஸ்கிருதத்தில் செய்திகளை ஒலிபரப்புகிறார்கள்.

शान्तानि पूर्व रूपाणि शान्तं नो अस्तु कृताकृत:।
शान्तं भूतं च भव्यं च सर्वमेव शमस्तु न:।।

𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿
𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌕𑍃𑌤𑌾𑌕𑍃𑌤𑌃।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌭𑌵𑍍𑌯𑌂 𑌚
𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌶𑌮𑌸𑍍𑌤𑍁 𑌨𑌃॥

முற்பிறவி சம்ஸ்காரங்கள் அமைதியாக இருக்கட்டும். செய்தவையும் செய்யாதவையும் நமக்கு அமைதியைத் தரட்டும். கடந்தகால வாழ்க்கையும் எதிர்கால வாழ்க்கையும் அமைதியாக இருக்கட்டும். எல்லாமே நமக்கு அமைதியாக அமைதியைத் தரட்டும்.

- (சாந்தி சூக்தம்)
அதர்வ வேதம் 19.9.

## இதய அஞ்சலி



# சுன்னாகம் - மயிலணி

# சிவஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்கள்

'விவிதவித்யா' ஆரம்பித்தகாலத்திலிருந்தே அதன் ஆர்வலராகவும் ஆதரவாளராகவும் இருந்த அன்பர் ஒருவரை நாம் இழந்து விட்டோம். தமிழ் வேதம் பற்றிய கட்டுரையைத் தொடராக எழுதிவந்ததுடன் பல ஆலோசனைகளையும் வழங்கிவந்தவர். சர்வானந்தமய பீடத்தின் பல நூல்வெளியீடுகளுக்கு ஊக்கமளித்தவர்.

பல ஆலயங்களிலே குருவாயிருந்து சிவாகமக் கிரியைகளை நெறிபிறழாமல் நடத்திப் பேரபெற்றவர். அந்தணர் இல்லங்களில் நடைபெறும் வைதிகக் கிரியைகளை நடத்தும் அனுபவமும் ஆற்றலும் வாய்ந்தவர்.

இத்தகு பெருமைக்குரியவரான சிவஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்கள் அவர்கள் 11 - 11 - 2003 இல் அமரராகிவிட்டார். குருபாரம்பரிய மரபில் வந்த இவர் வேதசிவாகம தேர்ச்சியுடன் இசைஞானமும் குரல்வளமும் நிறைந்தவர்.

மென்மையும் இனிமையும் நிறைந்த குரலில் குழைவோடு வரும் அபூர்வராகங்கள் கேட்பவர் இதயத்தில் இனிமை சேர்க்கும். பண் தவறாமல் திருமுறை ஓதுவதிலும் புராணபடனங்களிலும் துறைபோனவர்.

கும்பாபிஷேக வைபவங்களிலே இவரைச் சூழ்ந்து ஒரு சிறுகுழு எப்போதும் காணப்படும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு புதுவிடயங்களை இவரிடமிருந்து அவர்கள் பெறுவார்கள்.

வேதநெறி முறை தவறாமல் மரபுமுறையில் வளம்பெற வேண்டும். வளரவேண்டும் எனப் பேராவல் கொண்ட இவர் தமது இயலாமை நேரமின்மை என்பவற்றையும் கருதாமல் குருகுல மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காகச் சென்றுகொண்டிருந்த வழியில் விபத்து அவரை நீண்ட துன்பத்தில் ஆழ்த்திவிட்டது. அத்துன்பத்திலிருந்து அவர் விடுபட்ட நேரத்தில் நாம் மீளாத்துயரில் ஆழ்ந்துவிட்டோம். யாரும் யாருக்கும் ஆறுதல் சொல்ல முடியாத நிலையில் அவருக்கு நமது இதய அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஒரு புளுகுக்கதை

# குருமடம் கட்டிய ஆண்டிகள்

ஆண்டிகள் சிலர் சேர்ந்து கனவு கண்டனர். தாங்கள் கூடிக் கதைப்பதற்கு ஒரு மடம் வேண்டும் என ஆசைப்பட்டனர். மகேஸ்வரனை நோக்கித் தவம் செய்தனர்.

மகேஸ்வரன் அவர்கள் முன் தோன்றினார். தாங்களே சர்வ தேசங்களிலுமுள்ள எல்லா ஆண்டிகளுக்கும் பிரதிநிதிகள் எனத்தெரிவித்துத் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

"உங்களுக்கு அறிவொளி தரக்கூடிய இந்த விளக்கைத் தருகிறேன் இதைவைத்து நன்கு பயன்படுத்துங்கள்" என்று ஒரு அற்புதவிளக்கை (அலாவுதீனுடையது போல) மகேஸ்வரன் கொடுத்தார். ஆண்டிகளுக்கு இந்த விளக்கின் மகிமை புரியவில்லை. நாங்கள் கேட்டது ஏதோ இவர் ஏன் இதைத்தந்தார் என மயங்கினர். மேலும் அந்த விளக்கிற்கு எண்ணெய் விடும் பொறுப்பைத் தாமே மேற்கொள்வேன் என்றார் மகேஸ்வரன். இவர்களுக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. என்றாலும் இருக்கட்டுமே என அலட்சியமாக அந்த விளக்கை வாங்கிக் கொண்டார்கள். அதைக் கவனமாகப் பார்த்துக்கொள் என்று ஒருவனைக் காவலுக்கு வைத்தார்கள்.

காவல்காரன் சரியாக வேலை செய்கிறானா என்று பார்ப்பதிலேயே காலம் கடத்திய ஆண்டிகள் விளக்கு எரிகிறதா எண்ணெய் இருக்கிறதா என்பதைக் கவனிக்கவில்லை. அது நன்றாகச் செழிம்பு பிடித்துவிட்டது என்று எண்ணி ஒருநாள் அந்த விளக்கைத் துடைக்கத் தொடங்கினார்கள். திடீரென ஒரு பூதம் கிளம்பி "உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் செய்கிறேன்" என்று கேட்டபோதுதான் ஆண்டிகளுக்கு அந்த அற்புத விளக்கின் மகிமை தெரிந்தது.

அந்தப் பூதத்தை வைத்துக்கொண்டு பல நன்மைகளை அநுபவித்தார்கள்.

**கதைக்குள் ஒரு கதை கூறுகிறேன் கேளுங்கள்.**

பசியால் வருந்திச் சோர்ந்து அலைந்து திரிந்த ஒருவன் தற்செயலாகக் கற்பகவிருட்சத்தின் கீழ் போய்ச் சோர்ந்து படுத்தான். அம்மரத்தின் மகிமை தெரியாமலே 'எனக்கு இப்போது யாராவது அறுசுவை உண்டி கொண்டுவந்து கொடுத்தால் எவ்வளவு நல்லது' என நினைத்தான். உடனே ஒருவன் அங்கு உணவு கொண்டுவந்து கொடுத்தான். யார் எது கேட்பார்களோ அதையெல்லாம் கொடுப்பது கற்பக விருட்சத்தின் மகிமை. திகைப்போடு வயிறார உண்டவுடன். 'இப்போது ஒரு பஞ்சணை கிடைத்தால் எவ்வளவு நல்லது' என நினைத்தான். அருமையான பஞ்சணை ஒன்று காணப்பட்டது. அதில் படுத்தவாறே 'இப்போது ஒரு சிங்கம் வந்து என்னைச் சாப்பிட்டால் என்ன செய்வது?' என்று பைத்தியக்காரத்தனமாக எண்ணினான் உடனே

அதுவும் நடந்தது. அவன் அநியாயமாக இறந்தான்.

**இனி எங்கள் பழைய கதையின் இறுதிப் பகுதிக்கு வருவோமா?**

ஆண்டிகளுக்கு மதம் ஏறிவிட்டது. விளக்கைத் துடைத்தவுடன் வருகின்ற பூதத்திடம் "அவனை உதைத்துவா, இவனை வெருட்டிவிடு, அதனை உடை" என்று தான்தோன்றித்தனமாக ஏவத்தொடங்கித் தமக்குள் மோதிக் கொள்ளத் தலைப்பட்டனர். இப்போது மடமே ஆட்டம் காணத்தொடங்கியுள்ளது. காவல்காரன் போன இடம் தெரியவில்லை. விளக்குக்கே அபாயம் வந்துவிட்டது. ஆண்டிகள் மறுபடி மடம் கட்டப் போகிறார்களா?

## பெரிய இடத்துச் சிரிப்பு

**வேதவேதாங்கங்கள் வடமொழி தென்மொழிகள் இலக்கண இலக்கியங்கள் எல்லாம் கற்பிக்கப்படும் ஒரு நிறுவனத்தில் கடமையாற்றும் ஓர் ஊழியரின் தந்தையார் காலமாகிவிட்டார். அந்த நிறுவனத்தின் கல்விசார் பெருமக்கள் மிக நீண்ட நாட்களுக்குப் பின் (அதாவது அவரது தந்தையாரின் சபிண்டீகரணம் முடிவுற்று அவர் பிதிர் தேவர் நிலை எய்தி ஆனந்த ஹோமமும் நடந்து முடிந்தபின் - இனிக் கண்ணீர் விடுவதில்லை. துயரங்களை மறந்து இனிவரும் நாட்களைப் புதிய நாட்களாகக் கருதுவோம் என மனத்தைத்திடப்படுத்தி ஹோமநெய்யினால் கண்களைத் துடைத்து விட்டு இருக்கும் போது)**

**"நாங்களும் உங்கள் துயரத்தில் பங்கு கொள்கிறோம்" என 'அவசரத்தந்தி' அடித்திருந்தார்கள்.**

**அதைவிட நகைச்சுவை**

**"அமரர்.........சர்மா அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு .........." என்று எழுதப்பட்ட வாக்கியங்களைக் கண்டதும் அந்த ஊழியர் திடுக்குற்று நின்றார். இவ்வளவு நாளும் தம்முடன் பழகிய தமது தந்தையார் அமரராக இருந்திருக்கிறார் என்பதும் இப்போது அந்த அமரநிலையிலிருந்து நீங்கிச் சிவசாயுச்சியம் பெற்று விட்டாரோ என்று எண்ணி வியந்து போனார்.**

சிறுவர் மலர்.

# நலம் பல தரும் நாமஜெபம்

*செல்வன் தி. மயூரகிரி*
*அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.*

உலகத்திலேயே பழமையானதும் புதுமையானதுமான மதம் இந்து மதமே ஆகும். அதன் காரணமாகவே திருவாசகம் தந்த மணிவாசகர் இறைவனை,

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னை பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"

என்கிறார். இத்தகு பழமைமிகு மதம் ஏழை முதல் செல்வந்தன் வரை யாவரும் இக்கலியுக காலத்தே சர்வ மங்களமும் பெற ஒரு வழியை வகுத்தது. அதுவே நாமஜெபம். இந்த நாம ஜெப மகிமையை உணர்ந்தே "சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை" என்றும் "எல்லா நலனும் ஒருங்கே தரும் நாராயணா என்னும் நாமம்" என்றும் பெரியோர்கள் கூறியிருப்பதோடு அவ்வாறு நாமஜெபம் செய்து நற்பலனும் பெற்றுள்ளனர்.

"ஓம் நமோ நாராயணாய" எனும் அட்சாட்சரம், "சரவணபவ" எனும் ஷடட்சரம், "நமசிவாய" எனும் பஞ்சாட்சரம் ஆகிய நாமங்கட்கு இணையாக விண்ணிலும், மண்ணிலும் தேடினும் கிட்டாது. இந் நாமங்களே இவற்றுக்கு இணை. இந் நாமஜெபம் இற்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன்னைய காலம் தொட்டு இருந்து வருகின்றது. இந்த நாம ஜெபம் பற்பல நோய்களை நீக்கி மனச் சாந்தி அளிப்பது என்பது விஞ்ஞான பூர்வ உண்மையாகும். இவ்வாறான நாம ஜெபத்தின் சிறப்பை உணர்ந்த ஆன்றோர் இறைவனுக்கு அஷ்டோத்தர, திரிசதி, சஹஸ்ர நாமம் கூறி வணங்கும் முறையை உண்டாக்கினர்.

இன்று பிரசித்தி பெற்றுள்ள "சபரிமலை சாஸ்தா" வழிபாட்டில் "சாமியே சரணம் ஐயப்பா" எனும் கோஷம் முக்கியம் மிக்கது. மேலும் தென்னிந்தியாவில் வட இந்தியாவை விட நாம பஜனை குறைவாகவே உள்ளது. எனவே நாம கோஷத்தினால் ஏற்படும் நன்மைகளை உணர்ந்து வெட்கம் விடுத்து இறைவன் திருநாமத்தை உச்சரித்து அழுது தொழுதுவரின் இறையருள் நிச்சயம் கிடைக்கும்.

இன்னும் சிவபூமியாம் இலங்கையில் பிறந்த நாம் வெட்கப்பட வேண்டிய விடயம் எதுஎனின் மேனாட்டார் இந்துமத அனுஷ்டானங்களை விரும்பி அனுசரிக்க நாம் அவற்றைக் கைவிடுகின்றோம் என்பதே. எனவே இந் நிலையை மாற்ற முயலுவோமாக.

# வீரமணி என்னும் விந்தை

*யாழ்ப்பாணம் மா.த.ந. வீரமணி ஐயர் அவர்கள் அண்மையில் மறைந்தமை தமிழ் உலகம் முழுமைக்குமே பேரிழப்பாகும். அவருக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிப்பதற்காக "சிற்பி" அவர்களின் கவிதையை இங்கு பிரசுரிக்கிறோம். இக்கவிதை தினக்குரல் பத்திரிகையில் பிரசுரமானது என்பதோடு "நியந்ரீ" நடத்திய அஞ்சலி நிகழ்ச்சியில் சிற்பி அவர்களால் வாசிக்கப்பட்டதுமாகும்.*

விண்ணின் நமிர்தத் துளி
மண்ணில் விழுந்தது
வீர மணி என்னும்
விந்தை விளைந்தது
பண்ணும் பரதமும் தன்
கண்ணாய் ஒளிர்ந்திட
வண்ணக் கலாரத்னம்
என்னத் திகழ்ந்தது

இசைக் கருவி யாழோடு
இணைந்துள்ள எம் மண்ணில்
இசைப் பாக்கள் பொங்கியெழும்
இயலிசை வாரிதி நீயே.

மாரிக்குப் பருவமுண்டு
மதி ஒளிக்குப் பட்சமுண்டு
உன்னுடைய கவித்துவமோ
வற்றாத பாலூற்று
வளமான தேனாறு
ஆன்ம தாகந் தீர்க்கும்
அமிர்த வர்ஷிணியப்பா

சோலை மரங்களிடை
சுற்றித் திரிந்துவரும்
நீலக் கருங்குயிலோ
நித்தமுமே பாடாது
வஸந்தத்தில் மட்டுந்தான்
வாயைத் திறந்திசைக்கும்
நீ அத் தனிக் குயில்போல்
நீளும் மௌனத்தில்
ஆழ்ந்து கிடப்பதில்லை......

வாழ்க்கை முழுவதையும்
வஸந்தமென ஆக்கி விடும்
வல்லமை வாய்த்துள்ள
வண்ணக் கவிக் குயில் நீ
வண்மைக் கவிக் குயில் நீ

சங்கீதம் - உன் மனைவி
சாஹித்யம் - சற்புத்திரர்கள்
குடும்பக் கட்டுப்பாடு
உனக்கில்லை......
எழுது........ எழுது.........
இதயத்தைத் தொட்டெழுதி
இமயத்தைத் தொட்டவனே
எழுதிக் கொண்டே இரு.......
உன் மூச்சில் இசை பிறக்கும்
உன் பேச்சு........ பா வீச்சு
இசையும் நடனமும் உன்
பதங்களுக்காய் ஏங்கி நிற்கும்
உன் பேரைக் கேட்டுவிட்டால்
காற்றும் இன்னிசை பாடும்
கடல் அலையும் நடனமிடும்
வெள்ளிப் பனிமலையில்
வீற்றிருக்கும் வித்தகனோ
துள்ளி மகிழ்ந் துந்தன்
தாளத்திற்கு ஆடிடுவான்
ஆதரவுக் கேங்கி
அனுங்கிக் கொண்டே கிடந்த
அபூர்வ இராகங்களை
உன் நெஞ்சம் கொஞ்சி
உன் நாவும் தழுவியதால் -
இலயமும் சுருதியுமாய்

இணைந்து ஒலி பெருக்கிப்
பூவுடனும் பொட்டுடனும்
பொலிவதை -
நாம் ரசிக்கின்றோம்.

உன் பாவைத் தம் நாவில்
உலாவி வரச் செய்ததனால்
சௌந்தரராஜன், சீர்காழி
சிறப்புக்கள் பல பெற்றார்.
பிறந்தநாட் கொண்டாட்டம்,
புதுவீடு, பூணூல், பூப்புனித நீராட்டு
திருமணம், மணி விழா
சேவைகள், சாதனைகள்
நயந்து பாராட்டும் விழா
உன் வாழ்த்துப் பா இல்லா
வைபவமே இல்லையப்பா
கவிமாமணி, கலாபூஷணம்
கலாரத்னா, ஸாஹித்ய ஸாகரம்
முத்தமிழ்க் கலாநிதி,
மஹாவித்வான் - என
அணி நடையில் வருகின்ற
அடைமொழிகள் எல்லாம் - உன்
ஆளுமையின் கோலங்கள்
பணிச் சிறப்பின்
பற்றுச் சீட்டுக்கள்
இதை உணரா எம்மவர்கள்
கௌரவப் பட்டம் எனக்
கைவிரலை மடிக்கின்றார்
நெஞ்சினிக்கும் ஸாஹித்யம்
நிமிர்த்தும் தமிழ்க் கவிதை
எல்லாமே உன் சொத்து
உயிர்ப்பூட்டும் தமிழ்ச் சத்து
இவை யெல்லாம் பிரசவிக்கும்
நீயோ....... எம் முதுசொத்து

என்று அவனைப் பாராட்டி
எழுதிய மை காயவில்லை

போர்த்திய பொன்னாடைகளின்
பொலிவு இன்னும்
மாறவில்லை.........
அதற்குள் அவசரம் ஏன்?
எங்கே? எதற்காக?
யாரைத் தேடிச் சென்றான்?
மண்ணிற் பிறந்தவர்கள்
மரணிப்பர் என்றோ ஒரு நாள்
மறுப்பார்கள் இல்லை இதை
மறப்பாரும் இல்லைத் தான்
விதிக்கு ஒரு விலக்காக
வீரமணிக் கலை வேந்தன்
வீற்றிருப்பான் என்றே
வெகுநாள் நினைத்திருந்தோம்....
வெறுங்கையர் ஆகிவிட்டோம்

பனிக்கின்ற நெஞ்சு தரும்
இனிக்கின்ற கவி வலவன்
மண்ணின் கலை மைந்தன்
எண்ணங்களின் செழிப்பால்
இதயத்தின் விகசிப்பால்
ஆன்மாவின் நர்த்தனத்தால்
மாணிக்கக் கவி புனைந்த
மனத்தின் நிறைவோடு
விண்ணவர்க்கும் பண்ணிசைக்க
விரைந்துவிட்டான்.......
நினைந்திருப் போம்.......

"கற்பகவல்லி நின்
பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாயம்மா........"
அற்புதக் கீர்த்தனை
அமிர்தமாய்........ தேனாய்.........
ஆனந்த பைரவியாய்.........
அனவரதமும் ஒலிக்கும்
அருள் உலகம் சிலிர்க்கும்.

# ஆத்ம பூஜை

பூஜை என்ற சொல்லிற்கு போகம், யோகம், முக்தி முதலியவற்றை உண்டுபண்ணுவது என்பது பொருள்.

சதுர்வித புருஷார்த்தங்களையும் யாவரும் அடைவதற்கு சிவபூஜையே சுலபமானது எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. இதனை,

வ⁻ஜையா விவ⁻ஞு௦ ஈஜ௫ஜ்।
சுஜ்ரி கூாயெ௳ண ஷ௦வஓ௦।
ஜவெந வாவ ஷ௦ஶ⁻ஜி௦।
ஜூாந௦ ய௫ாநெந உாஶ⁻தெ॥

என்ற வாக்கியங்களிலிருந்து உணரலாம். சிவனைப் பூஜை செய்யும் இருப்பிடங்களாக ஆத்மா, குருமூர்த்தி, அக்னி, ஜலம், ஸ்தண்டிலம் முதலியவைகளைச் சொல்லி,

யஜந௦ ஜெஷ ஜைதஜ௫ஃ ஶ்ரிஜெ வவொகஜ ஞுகூஷணெ।
தஸ்ராஜிதஜ௦ வ௫யதெந ஶ்ரிஜாாராயந ஊாவளரகு॥

என்பதால் லிங்கமே சிறந்த இருப்பிடம் எனக் கூறப்படுகிறது.

யஜந௦ ஜிவிஓ௦ என்றபடி பூஜை இரண்டுவிதம். அவை வெளியில் பூஜிப்பது, உள்ளே பூஜிப்பது என்பன. அதிலும் முதலில் மனத்திற்குள் பூஜித்தல் செய்தே(அந்தர்யாகம்) பின்பு பாஹ்ய பூஜை என்னும் வெளிப்பூஜையை (பஹிர் பூஜை) செய்யவேண்டும்.

மயிலணி, பிரம்மஸ்ரீ
ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

ஸுஷய ூா மஂ வ ுாா ஸூரகூா

ஶாஹூ வ ுஜா ஶுா வரெஸு॥

- ஶிவப்ரதிஷ்டாவிதி

பூஜையின் தொடக்கத்தில் பஞ்சசுத்தி என்பது மிகவும் முக்கியமானது. அவை (1) ஆத்மசுத்தி (2) ஸ்தானசுத்தி (3) திரவ்யசுத்தி (4) மந்திரசுத்தி (5) லிங்கசுத்தி (பிம்பசுத்தி)

இதில் முதலாவதான ஆத்மசுத்தி சில இடங்களில் பூதசுத்தி எனக்குறிக்கப்படும். இந்த ஆத்மசுத்தி என்பது ஆத்மா சம்பந்தமான உடலைச் சுத்தஞ் செய்வது எனப்படும். நம் உடல் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என்ற ஐந்து பூதங்களால் ஆனது. தாய் தந்தையின் மலத்திலிருந்து உண்டானதால் மேலும் அசுத்தமானது. அசுத்தமே வடிவானதிலிருந்துகொண்டு நாம் நிர்மலமான நித்தமும் புனிதமான சிவனைப் பூஜிப்பது என்பது ஒவ்வாதது. எனவே நம் உடலை-ஐந்துபூதங்களைப் புனிதப்படுத்துவதே பூத சுத்தியாகும். கண்களுக்குப் புலப்படாமல் உள்ள அசுத்தங்களை நீக்கவே பூதசுத்தி செய்யப்படுகின்றது. பூதசுத்தி என்பது ஆத்மசுத்திக்கு ஓர்அங்கமே ஆகும். நம் உடலில் உள்ள கண்ணுக்குப் புலப்படும் கண் காது போன்ற அனைத்து உறுப்புக்களிலும் உள்ள அசுத்தங்களை ஸ்நானத்தினால் நீக்கியபின்பே பூதசுத்தியைச் செய்ய வேண்டும். பூதசுத்தி அந்தர்யஜநம் ஹோமம் சமாதி ஆகிய நான்கும் சேர்ந்ததே ஆத்மசுத்தி ஆகும்

பூதசுத்தி செய்யும் முறையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். நமக்கு ஸூக்ஷ்மசரீரம் ஸ்தூலசரீரம் என இரண்டு உடல்கள் உள்ளன. இவ்விரண்டையும் சுத்தஞ் செய்யும் பொழுது ஜீவனுக்கு ஆபத்து நேரிடக்கூடாது என்பதால் ஜீவனைத் வாத சாந்தத்தில் முதலில் சேர்க்க வேண்டும். பிறகு ஸூக்ஷ்ம -ஸ்தூல சரீரங்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.

<u>ஸூக்ஷ்ம- சரீரசுத்தி</u>

சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் மனஸ் புத்தி அகங்காரம் என்ற 8 தத்துவங்களால் ஆனது ஸூஷ்ம சரீரம். நமது உடலில் ஐந்து இடங்களில் உள்ள ப்ரம்மா முதலியவர்களிடம் இந்த 8 தத்துவங்களை அர்ப்பணிப்பதே ஸூஷ்ம தேகசுத்தியாகும் அதன் விவரம் வருமாறு:-

| | தேவதை | வீற்றிருக்கும் இடம் | விடவேண்டிய தத்வம் |
|---|---|---|---|
| 1 | ப்ரம்மா | ஹ்ருதயம் | சப்தம்,ஸ்பரிசம் |
| 2 | விஷ்னு | கழுத்து | ரஸம் |
| 3 | ருத்ரன் | முகவாய்கட்டை | ரூபம்,கந்தம் |
| 4 | ஈஸ்வரன் | புருவமத்தி | புத்தி,அகங்காரம் |
| 5 | சதாசிவன் | ப்ரம்மரந்த்ரம் | மனஸ்(பிந்து) |

ஸ்தூல தேக சுத்தி

வெளியில் தெரியும் நமது சரீரமே ஸ்தூல தேகமாகும். இது ஐந்து பூதங்கள் -நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாசம் என்பன வற்றால் ஆனது. இவ் ஐந்தும் குற்றம் உடையன. பூஜைக்காலங்களில் இவ் ஐந்தும் இடையூறு செய்கின்றன. எனவே இவற்றை செயலற்றதாக செய்ய வேண்டும். ஐந்து பூதங்களுள் ஒன்றுக்கொன்று விரோதமாகச் சில உள்ளன என ஆகமங்கள் கூறுகின்றன. அதாவது:-

நிலம்-காற்று, நீர்-நெருப்பு இவை ஒன்றுக்கொன்று விரோதமானவை. எனவே ஒரு குறிப்பிட்ட பூதத்தின் இடங்களை மற்றொரு எதிர் பூதம் நிரப்பிக் கொண்டதாக பாவிக்க வேண்டும். அதாவது உடலில் ரத்தம், சிறுநீர் போன்றவை நீரின் அம்சங்கள். அவற்றை எதிர் பூதமான நெருப்பு ஆக்ரமித்ததாக எண்ண வேண்டும். இவ்வாறு செய்வதால் எல்லாப் பூதங்களும் செயலிழந்து இடையூறு செய்யாவண்ணம் இருக்கின்றன. இப்படிச் செய்ய வேண்டுமெனின் முதலில் அந்தந்தப் பூதங்களின் ஸ்வருபத்தை அறிதல் அவசியமாகும்.

கிழே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு பூதங்களையும் தியானிக்க வேண்டும். ஒரு பூதத்தை தியானித்த பிறகு, அதற்குரிய உத்காத மந்திரத்தை அதனதன் குணங்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கூறவேண்டும். அதாவது நிலத்திற்கு ஐந்து குணங்கள். எனவே ஐந்து முறை உத்காத மந்திரத்தைக் கூறவேண்டும். இவ்வாறு செய்வதால் அவற்றின் குணங்கள் நீங்குகின்றன. பின்பு அவற்றை வேற்று பூதங்கள் வியாபிக்கும் போது, அவை அனைத்தும் செயலிழந்து இருக்கும் பொழுது, கால் கட்டை விரலில் உள்ள நெருப்பினால் உடலை எரிக்க

வேண்டும். அப்பொழுது உடலில் உள்ள தோஷங்கள் எரிந்து விடுகின்றன.

| | நிலம் | நீர் | நெருப்பு | காற்று | ஆகாசம் |
|---|---|---|---|---|---|
| நிறம் | மஞ்சள் | வெண்மை | சிகப்பு | கறுப்பு | புகை |
| தன்மை | கடினம் | மென்மை | மேல் நோக்கு | உருவ மின்மை | வண்ணம் சூன்யம் |
| அடையாளம் | வஜ்ரம் | தாமரை | ஸ்வஸ்திகம் | ஆறு புள்ளிகள் | அடையாளம் அற்றது |
| பீஜம் | லம் | வம் | ரம் | யம் | ஹம் |
| தேவதை | பிரம்மா | விஷ்ணு | ருத்ரன் | ஈஸ்வரன் | சதாசிவன் |
| மந்திரம் | சத்யோ ஜாதம் ஹ்ருதயம் | வாமதேவம் சிரஸ் | அகோரம் சிகை | தத்புருஷம் கவசம் | ஈசானம் நேத்ரம் அஸ்திரம் |
| கலை | நிங்ருத்தி | பிரதிஷ்டா | வித்யா | சாந்தி | சாந்த்ய தீதா |
| குணங்களின் எண்ணிக்கை | 5 | 4 | 3 | 2 | 1 |
| உத்காத மந்திரம் | ஹ்லாம் | ஹ்வீம் | ஹ்ரும் | ஹ்யைம் | ஹௌம் |
| மண்டல வடிவம் | சதுரம் | அர்த்த சந்திரன் | முக்கோணம் | ஷட்கோணம் | வட்டம் |

பின்பு த்வாசதாந்தத்தில் தலைகீழாக உள்ளதாமரையிலிருந்து பெருகும் அமிர்த தாமரையால் உடலை நனைத்தல் வேண்டும். ஆத்மாவை (ஜீவனை) மறுபடியும் த்வாதசாந்தத்திலிருந்து கொணர்ந்து ஹ்ருதயத்தில் அமர்த்தவேண்டும். பின்பு மறுபடியும் அந்த ஆத்மாவிற்கு அம்ருதாபிஷேகத்தைச் செய்ய வேண்டும்.

இப்பொழுது நம் சரீரம் மலமற்றதாகவும் அமிர்தமயமாகவும் உள்ளது. இவ்வாறு உள்ள சரீரத்தில் மந்திரங்களை நியாசஞ் செய்து நம் உடலை நிர்மலமாகவும் மந்திரமயமாகவும் செய்வதே பூதசுத்தியாகும்.

இந் நிர்மலமான உடலில் இருதய கமலத்தில் சிவனைச் செவ்வையாக உபசாரத்தோடு மனசால் பூஜிக்க வேண்டும். இதயத்தாமரை என்பது சிவாலயம் போன்றது. அதனை மனதால் உருவாக்கவேண்டும். அத்தாம்ரையின் கர்ணிகையானது சிவலிங்கத்தின் (க்ரியா) பீடம் போன்று உள்ளது. அதில் ஜ்ஞானமயமான நாதவடிவான லிங்கத்தைத் தூயமனத்தால் இருத்தி,அதை வழிந்தோடும் அமுதத்தால் நீராட்டி, வைராக்யம் (பற்றின்மை) என்ற சந்தனமிட்டு, அஹிம்சை முதலிய எட்டுவித குணங்களாகிய (எட்டுவித குணங்கள்:-கொல்லாமை

(அஹிம்சை), புலனடக்கம், பொறுமை, அன்பு, அறிவு, தவம், உண்மை, தூயஎண்ணம் ஆகியவை) மலர்களால் அர்ச்சித்து, ப்ராணாயாமம் என்ற தூபங் காட்டி, ஜ்ஞானமாகிய தீபத்தை ஏற்றி, இந்திர்யங்களை வெளியில செல்லவிடாமல் உள்ளிழுத்து, அவைகளையே நிவேதனமாக்கி. சுழுமுனையில் ப்ராணத்தின் போக்குவரத்தையே ஜபமென சமர்ப்பித்து, பூஜையைச் செய்தல் வேண்டும். அந்தர்யாக மின்றி வெளியில் செய்யும் பூஜை பயனற்றதாகும்.

மானிடப் பிறவியிலும் பூர்வபுண்ணிய வசனத்தால் அந்தணராய்ப் பிறந்த நாமனைவரும் நாம் பெற்ற இப்பிறவியின் பயனை அடைய வேண்டும் என்னும் பெருநோக்கோடு மார்க்கண்டேயர் சிவபூஜை (ஆத்மார்த்த பூஜை) ஒன்றாலேயே என்றும் வாழ்கின்றார் என்பதை மனத்திலிருத்தி, மேற்கூறியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகி, தாமும்தம் பிறவியின் பயனை அடைந்து ஏனையோர்க்கும் வழிகாட்டியாக விளங்கவேண்டுமென்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

---

## பட்டிமண்டபம்

விவித வித்யா 3ம் இதழில் பட்டிமண்டபம் பகுதியில் நாம் குறிப்பிட்ட விடயங்கள்பற்றி ஒட்டியும் வெட்டியும் சில கருத்துக்கள் கிடைத்துள்ளன. அவை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

? தமிழ்மொழி இலக்கண, இலக்கியங்கள்

? சம்ஸ்கிருதமொழி இலக்கண, இலக்கியங்கள்

? இந்துசமயம்-இந்து நாகரிகம்

? வேத சிவாகம கிரியாமுறைகள்

? சம்பிரதாயங்கள், சடங்குகள்

? விரதங்கள், வழிபாடுகள்

? சோதிடம்

இத்துறைகள் சார்ந்த, பலருக்கும் பயன் தரத்தக்க உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவ்வத்துறைசார்ந்த நிபுணர்களிடம் அவை சமர்ப்பிக்கப்பட்டு உரியமுறையில் பதில்விளக்கம் 'விவிதவித்யா'வில் பிரசுரிக்கப்படும்.

# ஆங்கிலத்தமிழ் (முற்றொடர்)

"விவிதவித்யா"வின் சென்ற இதழில் எழுத்தாளர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் தவறாகவும் பொருத்தமின்றியும் தமிழிற் புகுத்துகின்ற ஆங்கிலத்தமிழின் ஓர் அம்சமான மற்றும் என்னும் சொற்பிரயோகத்தை எடுத்துக்காட்டினோம். இங்கும் அதுபற்றிச் சில குறிப்புகள் தந்து மேற்செல்வோம்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளின் முன்பு நாளேடுகளும் வானொலியும் ஓர் அமைச்சரின் பதவிப் பெயரை காணி, காணியபிவிருத்தி அமைச்சர் என்றுதான் செய்தி வெளிவந்தன. இன்றோ காணி மற்றும் காணியப்பிவிருத்தி என்றும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் என்றும் தேவையற்ற கழலைகளைச் சுமந்து கொண்டு காட்சியளிக்கின்றன.

# தாய்மொழியில் தவறு செய்யலாமா?

முன்பு மாணவர்களிடம் முத்தமிழ் எவை? என்று வினாவினால் முத்தமிழ் என்பன இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன என்றும், இயல், இசை, நாடகம் என்றும் தங்கள் வயதுக்கேற்றவாறு விளக்கமாயும், சுருக்கமாயும் விடை கூறுவர். இன்றைய மாணவர்கள் மாத்திரமல்ல ஆசிரியர்களிற் சிலரும் இந்த விடைகள் சரியல்லவென்றும் இயல், இசை மற்றும் நாடகம் என்பதுதான் சரி என்றும் சொல்லக்கூடும். அவ்வளவுக்கு ஊடகங்கள் அவர்களைத் திசை திருப்பியிருக்கின்றன.

மற்றும் என்பதைப் போலவே A.M., P. M என்னும் குறியீடுகளும் தேவையின்றித் திணிக்கப்படுகின்றன.

**பண்டிதர் ச. பஞ்சாக்ஷர சர்மா**

'முதுபெருந் தமிழறிஞர் திருமாறன் அவர்களின் தலைமையின் கீழ்க்கூட்டம் நடந்தது' இந்தச் செய்தியிலிருக்கும் கீழ் என்பது எதற்காக வந்தது? சில நாடுகளில் ஆட்சிச் சபையில் மேற்சபை, கீழ்ச்சபை என்று இருசபை இருப்பது போன்று இங்கும் இருந்து அவற்றில் கீழ்ச்சபைக்கூட்டம் நடந்ததையே கீழ்க்கூட்டம் நடந்ததாகக் கூறப்பட்டதா? அல்லது தலைவர் வந்து மேசையின் மீது ஏறி அமர்ந்திருக்கச் சபையோர்

கீழே தரையில் அமர்ந்திருக்கக் கூட்டம் நடந்ததா? திருமாறன் தலைமையில் கூட்டம் நடந்தது என்றெழுதினால் எவருக்கும் விளங்காதா? 'கல்லோயாத்திட்டத்தின் கீழ்க் காணி வழங்கப்படும்' இச்செய்திப்படி வழங்கப்படும் காணி மேட்டுக்காணியல்ல; கீழ்க்காணி - பள்ளக்காணிதான் என்று பொருள் கொள்ளவேண்டுமா? 'கல்லோயாத்திட்டத்தில் காணி வழங்கப்படும்' என்று எழுதினால் இது வசனப்பிழையா? (Under the scheme என்ற ஆங்கில வாக்கிய முறையை நேரடியாக மொழிபெயர்த்ததால் இந்த நிலைமை.)

இருபதாண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் சில சங்கங்களின் செயலாளர்கள் தங்கள் சங்கக் கூட்ட நிகழ்ச்சி அறிக்கையைப் பின்வருமாறு எழுதிமுடித்திருப்பார்கள்:-

"இவ்விதமாகப் பி. ப. 11 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவெய்தியது" இதைக்கேட்டு பி. ப 11 மணியா! என்று பலர் அப்போது வியப்படைந்தது போல இப்போதும் இதைப் பார்த்துச் சிலர் வியப்படையலாம். ஆனால். இப்போதும் வானொலிகளில் இங்கு அரத்த சாமத்தை அதிகாலையென்றும். மத்தியானம் ஒரு மணியைப் பிறபகல் 1 மணியென்றும், மாலை 1 மணியென்றும் கூறுவது வியப்பில்லையா?

பி. ப. 11 மணி என்றவர்கள், ஆங்கிலத்திலுள்ள A. M. P. M என்பவற்றின் பொருளைச் சரியாய் விளங்காமல் முற்பகல் பிற்பகல் என்பவைதான் பொருளென்று தவறாயெண்ணி அப்படி எழுதினார்கள். அந்த ஆங்கில எழுத்துக்கள் நண்பகலுக்கு முன்பு நண்பகலுக்கு பின்பு என்னும் பொருள்கொண்ட இரு இலத்தீன் தொடர்களின் முதலெழுத்துக்கள். ஆகவே ஆங்கிலத்தில் P.M 11 மணி என்பது சரியானதே. பிறபகல் 11 மணியென்பது தவறு. அவ்வாறே, மேனாட்டு இயற்கை மாறுபாடுகளுக்கு ஏற்பத் தோன்றிய 'ஏளி மோணிங்' என்பதை அப்படியே மொழிபெயர்த்து அதிகாலை 12.15 க்கு அமைச்சர் வந்திறங்கினார் என்பது பரிகசிப்புக்குக் காரணமாகும் பெருந்தவறு.

இனி, செயப்பாட்டுவினைக் குழப்பம். இந்தச் செயப்பாட்டு வினை என்பது பாடசாலைகளில் எட்டாம் வகுப்பிலும் அதற்கு முந்திய வகுப்புக்களிலும் படித்து முடித்துவிடப்படுகிற சாதாரண இலக்கணம். இதைத் தெரியாமலே வானொலிச் செய்தியாளர்கள்-செய்தி எழுதுபவர்களும் வாசிப்பவர்களும் இருப்பது இரக்கத்துக்குரியது.

கொள்ளையர்கள் பொலிசாரினால் பிடிக்கப்பட்டனர் என்னும் வாக்கியம் சரிதானா என்பதை அறிவதற்குச் சுலபமான வழி. வினைச்சொல்லில்- பயனிலையிலிருந்து ஒரு வினாவை எழுப்பி விடை

காணவேண்டும். பிடிக்கப்பட்டவர் யார்? என்பது வினா விடை கொள்ளையர்கள் என்று முன்னே சரியாயிருக்கிறது. இப்படியில்லாமல் கொள்ளையர்களை என்று 'ஐ' சேர்த்திருந்தால் வாக்கியம் பிழை கொள்ளையர்களை என்று தொடங்கியிருந்தால் செய்வினை வாக்கியமாகவே- கொள்ளையர்களைப் பொலிசார் பிடித்தனர்- என்று முடிக்க வேண்டும். பட்டு – பட்டு – பட்டுப் பட்டான் என்று நீட்டி எழுதுபவர்களுக்குத் தாம் முதலில் ஐ சேர்த்து எழுதியது மறந்து போகிறது. வாக்கியம் பிழைக்கிறது. சிறிய வாக்கியமெழுதுபவர்களும் செயப்பாட்டுவினைத் தவறு செய்கிறார்கள். "மிகுதிநெல்லை அரிசியாக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுமெனக் கூறப்பட்டது" இது அண்மையில் வானொலியில் கேட்டது.

அதிபரை உள்ளிட்ட ஐந்து ஆசிரியர்களும் 100 மாணவர்களும் தென்னிலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர் இதுவும் ஆங்கிலத் தமிழ்தான் உள்ளிட்ட என்பதற்கு உள்ளே போடப்பட்ட என்பது பொருள். யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் நுழைந்த என்றும் ஒரு பொருளுண்டு. இவ் வாக்கியத்தை அதிபரும் ஐந்து ஆசிரியரும் 100 மாணவரும்...... என்று அல்லது அதிபர் தலைமையில் ஆசிரியர் ஐவரும் 100 மாணவரும்...... என்றோ எழுதினால் சாதாரணத்தமிழாகிச் செய்திக்கு ஒத்துவராதோ?

கள்வர் இருவர் திருடச் சென்ற போது பொலிசார் பிடித்துச் சென்ற செய்தி பத்திரிகை நிருபருக்குக் கிடைத்தால்,

"இருவரைக் கொண்ட திருட்டுக் குழுவொன்று ஆளில்லா வீட்டில் திருட்டில் ஈடுபட்டிருந்தபோது ரோந்து சென்ற பொலிசாரிடம் வசமாக மாட்டிக் கொண்டது. திருட்டுப் பொருள்களுடன் கைது செய்த பொலிசார் அவர்களைக் காவல் நிலையத்துக்கு எடுத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்தியதோடு இக்குழுவைச் சேர்ந்த மேலும் சிலரை அகப்படுத்த வலைவிரித்திருப்பதாகத் தெரிகிறது" என்று நீட்டிவிடுவார். எவ்வளவு நீட்டினாலும் வாசகர்கள் வாசித்துத் தொலைக்க வேண்டியதே.

"இதனையடுத்துச் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெற்றது." இச்செய்தியை வாசித்ததும் ஒரு சந்தேகம் தோன்றலாம். சுவாமியை வீதிவலம் வரவிடாமல் யாரோ தடுத்தார்கள் போலும் பின்பு அதிகாரிகளோ ஊர்ப்பெரியார்களோ வந்து சமரசம் செய்ததை அடுத்து வீதிவலம் வரல் இடம்பெற்றது போலும் என்ற எண்ணத் தோன்றும். நகரங்கள் கிராமங்கள் எங்கும் படித்தவர் படியாதவரிடமெல்லாம் இந்த இடம்பெறும் பரவிவிட்டது. இதனிடத்திலிருந்த நிகழும் நடக்கும் என்னும் சொற்களுக்கு விடை கொடுத்தாயிற்றோ!

அலங்கோல ஆங்கிலத் தமிழ்ச் சொற்களில் உட்படுத்தப்படுதல் என்பதும் ஒன்று. நீதிமன்ற விசாரனைக்கு உட்படுத்தப்பட்டார் என்பதை நீதிமன்றினால் விசாரிக்கப்பட்டார் என்று எழுதினால் பிழையாகுமா? வீதிகளில் மக்கள் மகிழ்வுடன் வலம்வருவதைக் காணக்கூடியதாயிருக்கிறது. இவ்வாக்கியத்திலுள்ள காணக்கூடியதாய் என்பதும் ஆங்கிலத்தமிழே. விழாக்களை நேர்முகவர்ணனை செய்வோர் அலுக்காமல் சலிக்காமல் திருப்பித் திருப்பிச் சொல்லும்சொல். மக்கள் உலாவந்து கொண்டிருக் கிறார்கள். உலாவருவதைக்காண்கிறோம். உலாவருவது தெரிகிறது. என்றெல்லாம் அனுபவமிக்க வர்ணனையாளர்கள் வேறுவேறு விதமாய் வாக்கியங்களை அமைப்பார்கள். ஏனையோரை ஆங்கில 'விசிபிள்' விடாது.

விபத்தில் காயப்பட்டவர் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார் என்பது சில ஆண்டுகளுக்கு முந்திய 'மித்திரன்' பத்திரிகையின் பரிசோதனைத் தமிழ் இப்போது இது கைவிடப்பட்டிருக்குமென்று நம்புகிறோம். இதற்கு ஆதரவு கிடைத்திருந்தால் ஓடப்பட்டார், விழப்பட்டார், வரப்பட்டார், போகப்பட்டார் என்று தமிழ்ச்சொற் களஞ்சியம் பல்கிப் பெருகியிருக்கும்!

ஒரு மொழிக்குரிய மரபுத் தொடர்களிற் சில இன்னொரு மொழிக்கும் பொருந்தக் கூடும். பல பொருந்தமாட்டா. முகங்கொடுத்தல், மூக்கை நுழைத்தல் முதலியன தமிழுக்கு ஏற்றவையல்ல. சூடான வரவேற்பு என்பது நல்ல வரவேற்பு, சுமுகமான வரவேற்பு என்ற விதமாக மாற்றி மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

மரபுத்தொடரல்லாததும் 'மற்றும்' என்ற சொல் வகையைச் சேர்ந்ததுமான ஒரு சொல் பல ஆண்டுகளுக்கு முன்பே தவறான பொருளில் தமிழில் இறக்குமதி செய்யப்பட்டுத் தமிழறிஞர்களைக்கூடப் பற்றிப் பிடித்திருக்கின்றது. அதுதான் 'அழைக்கப்படும்' என்ற மொழிபெயர்ப்பு. Call என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பல பொருள் உண்டு. அவற்றுள் பலருக்குந் தெரிந்த பொருள் அழை(கூப்பிடு) என்பது. அதிகம் அறியப்படாத பொருள் 'பெயரிடு' என்பதாகும். இந்நாடுகளுக்கு வந்த ஆங்கிலேயர் இந்த இரண்டாம் பொருளில் மனிதர் பெயர், பிராணிகளின் பெயர் இடங்களின் பெயர்களைக் குறிப்பிடும் வாக்கியங்களில் call என்ற வினைச் சொல்லை உபயோகித்த போது அதை விபரீதமாய் விளங்கிக் கொண்ட அக்காலத்தமிழர் அழைக்கப்படும் என்று மொழி பெயர்த்தார்கள். தமிழில் அழை என்பதற்குப் பெயரிடு என்ற பொருள் இல்லவேயில்லை. "இந்தப்பிள்ளையார் உளியினால் பொள்ளப்படாத சுயம்பு மூரத்தியாதலால் பொள்ளாப்பிள்ளையார் என்றும் பொல்லாப் பிள்ளையார் என்றும் பெயர்

பெற்றார்" என்று சொல்வதற்குப் பதிலாக அழைக்கப்பட்டார் என்று ஆங்கிலத்தமிழில் எழுதத் தொடங்கிவிட்டார்கள். எவ்வளவு பக்தர்கள் கூடிக் கதறியழைத்தாலும் பிள்ளையார் ஏனென்று கேட்கமாட்டார். எழுந்து வரவும் மாட்டார். ஏனெனில் இக்காலம் புராணகாலம் அல்ல.

சினிமா விசிறி என்ற பெயர் Fan என்ற சொல்லைப் பிழையாய் விளங்கியவர்களால் எவ்வாறு தவறாய் வழங்கப்பட்டதோ அவ்வாறுதான் இந்த அழைக்கப்படுதல் என்ற சொல்லும் தவறானது என்ற உண்மையை உணர்ந்து திருத்திக் கொள்வது தமிழ்ச்சிதைவைத் தடுக்க உதவும். வழக்கத்தில் வந்துவிட்டது. ஆகையால் விடமுடியாது என்போர் இப்போது வந்துள்ள நல்லதண்ணீர் வேண்டாம். அப்பர் வெட்டிய கிணற்று உவர் நீரைத்தான் குடிப்போம் என்பவர்களின் வழியிற் செல்லட்டும்.

அண்மையில் வானொலிச் செய்தியிற் கேட்டது இது. "நீதிமன்றிலிருந்து மறியற்சாலைக்கு எடுத்துவரப்பட்டபோது மறியற்சாலை வாயிலில் எதிர்பார்த்து நின்ற ஒரு கோஷ்டியினரால் தங்கள் மோட்டாரில் கடத்திக் கொண்டு போய்விட்டனர்." எடுத்துவரப்பட்டதும் கடத்திக்கொண்டு போகப்பட்டதும் என்ன பொருள்? அது பொருளல்ல; உயிருள்ள சுகதேகமுள்ள இரு மனிதர்கள்; கைதிகள்; அவர்களைக் காவலாளிகள் எப்படி எடுத்து வந்தார்களோ? தாய் பிள்ளையை இடுப்பில் எடுக்கிக் கொண்டு வந்தார்களோ? அல்லது தோளிற் சுமந்து எடுத்து வந்தார்களோ? இப்படியொன்றுமில்லை மறியற்சாலையின் 'வானில்'தான் கொண்டுவந்தார்கள். எங்கள் சந்தேகத்துக்குக் காரணம், செய்தியில் வந்த 'எடுத்து' என்பது செய்தியை மொழி பெயர்த்தவர் ஆங்கிலத்தில் Take என்றிருந்ததை அப்படியே தமிழாக்கினார்.

இவ்வளவில் ஆங்கிலத் தமிழ் வியாபகத்தை நிறுத்திக் கொண்டு வேறு தமிழ்ப்பிழைகளைக் காட்டுவோம்.

## ஐயம் தெளி அரங்கு

*ஐயம் தெளி அரங்கு பகுதியின்மூலம் தமது ஐயங்களைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பலர் இந்துசமய நெறிமுறைகள், கிரியைகள் பற்றிய தமது ஐயங்களை வினா வடிவில் அனுப்பிவைத்துள்ளனர்.*

*அவை அவ்வத்துறை சார்ந்த அறிஞர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.*

## சமஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள்

2



# வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ
# தி.கி. சீதாராம சாஸ்திரிகள்

(விவிதவித்யா 3 ஆம் இதழில் சமஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள் என்ற கட்டுரைத் தொடரின் முதலாவது கட்டுரை நியாயசிரோமணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் பற்றி அவரது ஜயந்தி தினத்தை முன்னிட்டு வெளிவந்தது. இப்போது இந்த ஐப்பசி மாதம் பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளுடைய சிராத்த தினத்தையொட்டி இந்த இரண்டாவது கட்டுரை இடம்பெறுகிறது. விவிதவித்யா ஆசிரியர் அமரர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா அவர்களுக்கு அஞ்சலி செய்யும் இவ்விதழில் அவரது குருவாகிய சாஸ்திரிகள் பற்றிய கட்டுரையும் இடம்பெறுவது பொருத்தமானதே. இக்கட்டுரைக்கான தகவல்கள் பல பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் B.A(Hons) அவர்கள் எழுதி நியந்த்ரீ வெளியீடாக மார்ச் 2001 இல் வெளியிடப்பட்ட "வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி. சீதாராம சாஸ்திரிகள் - சில நினைவலைகள்" என்ற நூலில் பெறப்பட்டவை என்பதை நன்றியுடன் தெரிவித்தக்கொள்கிறோம்.)

ஈழத்தில் சமஸ்கிருதம் வளர்த்த சான்றோர்கள் வரிசையில் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் அவர்களுக்கு மிகமுக்கியமான ஓரிடம் உண்டு.

தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்து இந்நாட்டையே தமது சொந்த நாடுபோல் கருதி ஆன்மீக அறப்பணிகளும் ஆசிரியப்பணியும் ஆற்றி அமைதியாக வாழ்ந்தவர் சாஸ்திரிகள்.

தமிழ்நாட்டில் திருப்புடை மருதூர் கிராமத்திலே ஸ்ரீகிருஷ்ண உபாத்யாயர் - லக்ஷ்மி அம்பாள் தம்பதிகளின் சீமந்த புத்திரராகத் தோன்றியவர். சீதாராமசாஸ்திரிகள். விரோதிகிருது வருடம் தை மாதம் 17 ம் திகதி (30 - 01 - 1912) செவ்வாய் இரவு 12.50 இற்கு மிருகசீரிட நட்சத்திரம் 4 ஆம் பாதத்தில் இவர் பிறந்தார். கோமதீவல்லபசீதாராமன் என அன்பாகப் பெயரிட்டனர் பெற்றோர். இவருக்கு கோமதீகாந்த இராமகிருஷ்ணன் என்ற இளைய சகோதரரும் உளர்.

பதினொரு வயதுவரை தந்தையாரிடமே வைதிகக்கல்வியைக் கற்றுவந்ததுடன் அதே ஊரிலிருந்த காசி சாஸ்திரிகளிடமும் வேத அத்யயனம் செய்தார். அதன்பின் ஐந்தாண்டுகள் உயர்பாடசாலையொன்றில் மரபுரீதியான காவியபாடம் கற்று இலக்கண இலக்கியங்களிலும் ஆற்றல் பெற்றார். பின்னர் சிதம்பரம் ஆர். எம். எஸ். பாடசாலையில் எம். என். ராகவசாஸ்திரிகளிடம் முறையாக வியாகரணம் கற்றார். அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்று வியாகரணசிரோமணி என்னும் பட்டத்தையும் பெற்றார்.

அம்பா சமுத்திரம் பெண்கள் பாடசாலையில் சிலகாலம் சமஸ்கிருதம் கற்பித்தார். பின்னர் தமது மாமனாரின் இருப்பிடம் சென்று வைதிகவாத்தியாராகவும் தொழில் புரிந்தார்.

இதற்கிடையில் ஹரிஹர தீக்ஷிதர் மகள் சீதாலக்ஷ்மி அம்பாளை 1925 ஆம் ஆண்டில் திருமணம் செய்து இல்லறத்திலும் நுழைந்தார். (சாஸ்திரிகளுக்கு ஏழு பெண் குழந்தைகளும் ஒரு ஆண்மகவும் உள்ளனர்.)

இக்காலகட்டத்தில் சுழிபுரம் பறாளாய் சிவசுப்ரமணிய சுவாமி கோவில் பிரம்மஸ்ரீ சு. ஷன்முகரத்தின சர்மா அவர்களின் முயற்சியில் 1935 ஏப்ரல் மாதம் தலைமன்னார் வழியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். பறாளாயில் கோவிலுக்கருகிலுள்ள மடம் அவரது வீடாகியது. அங்கு வேதபாராயணமும் சமஸ்கிருத வகுப்பும் நடைபெறலாயின.

பின்னர் படிப்படியாக ஜாதகம் பார்த்தல், வைதிகக்கிரியைகளை அந்தணர் இல்லங்களில் நடத்திவைத்தல் உபந்நியாசம் செய்தல், ஆலயங்களில் கும்பாபிஷேகம் முதலிய வைபவங்களில் கலந்துகொள்ளுதல் முதலிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டும் பல்வேறிடங்களில் சமஸ்கிருத வகுப்புகள் நடத்தியும் தமது பெரிய குடும்பத்தை நடத்தினார்.

திருநெல்வேலி காவிய பாடசாலையிலும் பின்னர் நாவலர் தர்மகர்த்தாசபையின் பிரவேச, பாலபண்டித, பண்டித வகுப்புகளிலும் பரமேஸ்வராக்கல்லூரி, சுன்னாகம் பிராசீன பாடசாலை, பிராம்மண சமாஜம் ஆகிய நிறுவனங்களிலும் சாஸ்திரிகள் கற்பித்தார்.

சமயப்பெரியார்கள், ஆலயபரிபாலகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், போன்ற பல்வேறுபட்ட மக்களின் ஐயங்களைப் போக்கியும், ஆலோசனை நல்கியும், வழிகாட்டியும் வேதாத்யயனம் செய்வித்தும் கிரியைகளைச் செய்வித்தும் வந்ததோடு சமஸ்கிருதச் செய்யுள்கள், வாழ்த்துப் பத்திரங்கள் எழுதுதல் பாடநூல்கள் மற்றும் சமயநூல்களை வெளியிடல் என்று இவ்வாறு பல்வேறுபட்ட பணிகள் சாஸ்திரிகளை அந்தண சமூகம் மட்டுமன்றி ஈழத்தின் இந்து சமூகத்தினர் அத்தனை பேருக்கும் வேண்டியவராக ஆக்கிவைத்தன.

1973இல் சாஸ்திரிகளின் மணிவிழாவைப் பல்வேறு அமைப்புக்களும் கொண்டாடின. அவரை இங்கு அழைத்து வந்தவரான பிரம்மஸ்ரீ சு. ஷண்முகரத்தின சர்மா, அவரோடு என்றும் உழுவலன்பு பூண்டிருந்த பிரம்மஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்கள் சாஸ்திரிகளது சிறந்த மாணவர்களுள் முதன்மையானவர்களான பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா, கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் இவ்விழாக்களில் முன்னின்றுழைத்தனர். மணிவிழா மலர்களும் வெளியாகின.

1979 முதல் ஓரளவு ஓய்வுபெறத்தொடங்கிக் கொழும்பில் சிறிதுகாலமும் பின்னர் 1984 முதல் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மகள் பார்வதி குமாரசாமி சர்மாவுடனும் வாழ்ந்திருந்தார்.

13 - 11 - 1988 இல் ஸ்கந்தஷஷ்டி விரதத்தின் 3 ஆம் நாள் (தமது இஷ்டதெய்வத்தின் விரத நாளில்) இறையடி சேர்ந்தார்.

சாஸ்திரிகள் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே பரிசுத்திட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சம்ஸ்கிருதத்துறையில் சிறப்புக்கலையில் திறமைச்சித்தி பெறுபவர்களுக்குப் பரிசுவழங்கப்படுகிறது.

சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்திலேயே உரையாட வல்லவர் என்பதும் பலருக்கு அவர் சம்ஸ்கிருதத்திலேயே கடிதங்கள் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் சம்ஸகிருதம் வளர்த்த சான்றோர் வரிசையில் வியாகரண சிரோமணி தி.கி. சீதாராம சாஸ்திரிகளையும் போற்றி வணங்குகிறோம்.

புதிய தொடர்........


# புகழ் பூத்த பூசுரர்கள்

பாரதநாட்டிலே எத்துறையிலும்சரி பெரும்புகழோடு விளங்கும் பெரியோர்களை வரிசைப்படுத்தினால் முன்னணியில் நிற்பவர்கள் அந்தணோத்தமர்களே. ஈழமண்ணில் அத்தகைய நிலைமை இல்லையெனினும் எல்லாத் துறைகளிலும் எல்லாக் காலங்களிலும் நமது அந்தணர் சமூகத்தினர் சிலர் முன்னின்று உழைத்திருப்பதைக் காணமுடிகிறது.

இதுபற்றித் தனித்துவமாகக் கூறவேண்டியது ஏனெனில், பொதுவாகத் தாம் தனியாக ஒதுங்கி வாழ்கின்ற இயல்புடைய - மற்றவர்களோடு சமமாகக் கலந்துபழகமுடியாத வாழ்க்கைப் போக்குகளையுடைய அந்தண குலத்தில் தோன்றி, அனைத்து மக்களோடும் பழகிச் சமூக சேவைகள் செய்தவர்களாகவும் அதேநேரம் தமது தனித்துவத்தை இழக்காமலும் வாழ்ந்த பெரியர்ர்களாக இருப்பது போற்றத்தக்கது என்பதாலேயே.

இத்தகைய சிறப்புமிக்க பெரியார்களின் வாழ்க்கையையும் பணிகளையும் இன்றைய இளம் சமுதாயத்தினர் தெரிந்து கொள்வதற்காகவும் அழியாத ஆவணமாகப் பாதுகாத்து வைப்பதற்காகவும் இப்பகுதி ஆரம்பமாகிறது. பல அன்பர்கள் நேரிலும் கடிதத்திலும் இப்டி ஒரு பகுதியின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் அடுத்த இதழில் இத்தொடர் ஆரம்பமாகிறது. வாசக அன்பர்கள் தாம் அறிந்த, தம்மோடு தொடர்புடைய பெரியோர்கள் பற்றிய விபரங்களைத் தந்துதவலாம். முழுமையான கட்டுரைகளாகவும் எழுதி அனுப்பலாம்.



முதலாவது கட்டுரை
அடுத்த அதழில்....

*பிரம்மஸ்ரீ,*
*சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்.*

அடுத்து வரும் இதழ்களில்...........

வழமையான......

ஸ்தோத்திர அறிமுகம்

சம்ஸ்கிருதம் வளர்த்த சான்றோர்

ஜோதிஷ பாடம்

ஐயம் தெளி அரங்கு

தாய்மொழியில் தவறு செய்யலாமா?

பட்டி மண்டபம்

பாட்டி மண்டபம்

புத்தகத்தோட்டம்

மற்றும்.........

போட்டிமுடிவுகளும் புதிய போட்டிகளும்

பரீட்சார்த்திகளுக்கான சம்ஸ்கிருத இலக்கண பாடங்கள்

விவேகானந்தர் காட்டும் சீதை

வடமொழித் தனிப்பாடல்கள்

(சுவைமிக்க சுலோகங்கள்)

சம்க்ஷேப வார்த்தைகளும் சங்கேத வார்த்தைகளும்

சமய நூல்களில் இலக்கிய நயம்

இன்னும் பல புதுமையான பழைமைகள்.

ஆவலோடு எதிர்பார்த்திருங்கள்

நீங்களும் உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.